பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

20 04 2025 **SUNDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஈஸ்டர் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

2. வேவ்ஸ் மாநாடு படைப்பாளிகளுக்கு உலகளாவிய இணைப்பை ஏற்படுத்தும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் 3 ஆயிரத்து 500 புதிய பேருந்துகள் இயக்கப்படுவதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

5. உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

*---- இனி விரிவான செய்திகள் --*

<<<<<<>>>>>>

ஈஸ்டர் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

புனித வெள்ளியன்று சிலுவையில் அறையப்பட்ட இயேசுபிரான் மூன்றாம் நாளன்று உயிர்த்தெழுந்த தினம் உலகெங்கும் ஈஸ்டர் பண்டிகையாக கொண்டாப்படுகிறது.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கிறிஸ்தவ மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்நாள் தன்னலமற்ற அன்பு மற்றும் சேவையை உணர்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

இயேசுபிரானின் வாழ்க்கை மக்கள் அனைவரும் உண்மை, நீதி மற்றும் கருணையை பின்பற்றி வாழ வேண்டும் என்பதை எடுத்துரைப்பதாகவும் குடியரசுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இயேசுபிரானின் போதனைகள் நல்லிணக்கத்துடன் கூடிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதை மக்களுக்கு உணர்த்துவதாக தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு, தமிழகத்தில் உள்ள தேவாலயங்களில் நள்ளிரவு சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன

நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி பேராலயத்தில், நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனையில் தமிழகம் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து ஏராளமானோர் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் - 47 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>>**

உலக ஒளி-ஒலி பொழுதுபோக்கு மாநாடான வேவ்ஸ், படைப்பாளிகளுக்கு உலகளாவிய இணைப்பை ஏற்படுத்தும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மும்பையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பங்கேற்க ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்திருப்பதன்மூலம், இந்தியாவின் படைப்பாற்றல் பொருளாதாரம் பெரும் வளர்ச்சியடையும் என்றார்.

இத்துறையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப முன்னேற்றங்கள் புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ள அதேவேளையில் பல்வேறு சவால்களையும் ஏற்படுத்தியிருப்பதாக அவர் கூறினார்.

ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு தொழில்துறையினருக்கு வேவ்ஸ் மாநாடு ஒரு சர்வதேச வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இத்துறையில், புதுமை கண்டுபிடிப்புகளை மேற்கொண்ட சாதனையாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட இருப்பதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இத்தேர்தலில் பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும் என்றும், திமுக இதுவரை இல்லாத தோல்வியை சந்திக்கும் என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் பேசிய பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன், சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குச்சாவடி அளவிலான பணிகளை கட்சித் தொண்டர்கள் இப்போதே தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

தமிழகம் முழுவதும் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக 3 ஆயிரத்து 500 புதிய பேருந்துகள் இயக்கப்படுவதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

மதுரையில் புதிய பேருந்துகளின் சேவையை தொடங்கிவைத்து போக்குவரத்து தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

முன்பு நஷ்டத்தில் இயங்கிவந்த போக்குவரத்துத்துறை வளர்ச்சிபெற்று தற்போது சீரான நிலைக்கு வந்துகொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் உள்ள சிறந்த போக்குவரத்துக்கழகங்களுக்கான விருதுகளில் தமிழக அரசு போக்குவரத்துக்கழகங்கள் 19 விருதுகளை பெற்றிருப்பதாகவும் திரு சிவசங்கர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

கோடை விடுமுறையையொட்டி கொடைக்கானல் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கென பல்வேறு சிறப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திரு சரவணன் தெரிவித்துள்ளார்.

கொடைக்கானலில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஏற்பாடுகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுற்றுலாப்பயணிகளின் வசதிக்காக கட்டணமில்லா தொலைபேசி சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - ஆட்சியர் சரவணன் - 49 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈஸ்டர் பண்டிகையையொட்டி, யுக்ரைனுக்கு எதிரான தாக்குதல் இன்று ஒருநாள் நிறுத்தப்படும் என்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டின் அறிவித்துள்ளார்.

---------------

அமெரிக்காவின் வரி விதிப்பு நடவடிக்கைகளால் அரபு நாடுகளின் எண்ணெய் அல்லாத ஏற்றுமதி பெருமளவு பாதிக்கப்படும் என்று மேற்காசியாவுக்கான ஐ நா பொருளாதார மற்றும் சமூக ஆணையம் தெரிவித்துள்ளது.

---------

சட்டீஸ்கர் மாநிலம் நாராயண்பூர் பகுதியில் நான்கு பெண்கள் உட்பட 20 நக்சலைட்டுகள் சரணடைந்தனர்.

-------------

தலைநகர் தில்லியில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை போக்கும் வகையில், ஜிபிஎஸ் பொருத்தப்பட்ட ஆயிரம் டேங்கர் வாகனங்களில் தண்ணீர் விநியோகிக்கும் பணியை முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா இன்று தொடங்கிவைக்கிறார்.

----------

தூத்துக்குடி மாவட்டம் சேர்வைக்காரன் மடம் பகுதியில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு எஸ் எஸ் சுந்தர் பங்கேற்று மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

--------------

மதுரையில் பொது இன்சூரன்ஸ் நிறுவன ஓய்வூதியதாரர் சங்கத்தின் வெள்ளிவிழா மாநாடு நடைபெற்றது.

---------------

காஞ்சிபுரம் மாவட்டம் மேல்தாங்கல் கிராமத்திலும் சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில், சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

----------------

திருப்பத்தூரில் ஏரியில் குளிக்கச் சென்ற 12 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

---------------

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை சுற்றுவட்டாரப்பகுதிகளில் சூறாவளி காற்றுடன் பெய்த பலத்த மழை காரணமாக மரங்கள் முறிந்து விழுந்தன.

----------------

சென்னை முத்தையால்பேட்டை பகுதியில் ஆன்லைன் வர்த்தகத்தில் 88 லட்சம் ரூபாய் அளவிற்கு மோசடி செய்த நபர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

பெருவின் லிமாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 10 மீட்டர் ஏர்ரைபிள் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணியை இரண்டு ரன் வித்தியாசத்தில் லக்னோ அணி வென்றது.

ஜெய்பூரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 180 ரன் எடுத்தது.

181 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 178 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பஞ்சாப் - பெங்களூரு அணியையும், சென்னை – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

------------

தேசிய நடை போட்டியில் உத்தரப்பிரதேசத்தின் ராம்பாபு தங்கப்பதக்கம் வென்றார்.

சண்டிகரில் நடைபெற்ற இப்போட்டியின், ஆடவர் 35 கிலோமீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை வென்று தேசிய சாதனை படைத்தார்.

இப்போட்டியில் சந்தீப்குமார் வெள்ளிப்பதக்கத்தையும், விஜய் ஓம்கார் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் 34 கிலோமீட்டர் பிரிவில், **Payal** தங்கப்பதக்கத்தையும், மஞ்சுராணி வெள்ளிப்பதக்கத்தையும், ரமன்தீர் கவுர் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஆடவர் 20 கிலோமீட்டர் பிரிவில் தமிழகத்தின் **‘Servin Sebastian** தங்கப்பதக்கம் வென்றார்.

-------------------

மகாராஷ்ட்ரா ஓபன் செஸ் போட்டி இன்று புனேயில் தொடங்குகிறது, ----------

மதுரையில் நடைபெற்ற ரயில்வே கோட்ட அளவிலான கபடி போட்டியில், திருச்சி கோட்டம் சாம்பியன் பட்டத்தை வென்றது. மதுரை கோட்டம் இரண்டாம் இடத்தை பிடித்தது.

**<<<<<<END>>>>>>**